அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 25 /2017
தேதி: 06.03.2017

## பெட்ரோல் டீசல் விலை உயர்வு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

நடு இரவில் சுதந்திரம் பெற்ற நாடு என்பதாலோ அனைத்து அறிவிப்புகளும் நள்ளிரவுகளில் வெளியிடப்படுகின்றன. முக்கியமாக பெட்ரோல் டீசல் விலை உயர்வு. நாமும் இது போன்ற விலை உயர்வுக்கு பழகிப்போய்விட்டோம். சில நாட்கள் போராடிவிட்டு, மறுபடியும் நமது பணிகளுக்கு திரும்ப செல்கின்றோம். நம்மை சுற்றி பலதரப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்காக நாம் போராடிக்கொண்டிருக்கும் நிலை நீடித்துக்கொண்டிருக்கும் போது மேலும் ஒரு பொருளாதார அழுத்தம் கொடுக்கப்படுவது நியாயமற்றது.

பெட்ரோலுக்கு ரூபாய் 3.78 டீசலுக்கு ரூபாய் 1.7 ஏற்றியிருப்பது அடித்தட்டு மக்களையும், நடுத்தர மக்களையும் மிகவும் பாதிக்கும் என்பது உண்மை.

இலவச பொருட்கள் மற்றும் பல நலத்திட்டங்களுக்கான வருமான திட்டமிடல் சரியானமுறையில் இருக்கவேண்டும். இல்லையெனில் இந்த காரணத்திற்காக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கொண்டுவருவது போன்ற செயல்கள் தவிர்க்க முடியாமல் போய்விடும். இது மேலும் மேலும் மக்களை துன்பமுற செய்யும்.

தற்போது இந்த மதிப்பு கூட்டு வரியை பெட்ரோல் டீசல் மீது திணித்து இருப்பதன் அவசியம் என்ன என்பதை அரசு விளக்கவேண்டும். பட்ஜெட் கூட்டத்திற்கு வெகு அருகாமையில் இருக்கும் போது மக்கள் மேல் இந்த ஒரு விலை உயர்வு திணிப்பு எதற்கு என்பதை விளக்கவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

தமிழக மக்கள் பல காரணங்களால் அதிருப்தியில் இருப்பதால், இந்த விலை உயர்வை திரும்ப பெறுவதற்கு தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டு கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்